605 / 18

'அ' பிரிவு

A1 வேற்றுமை

Q1 முதல் Q5 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)

Q1 நாம் _______________ வாழ உடற்பயிற்சிக்கு நேரத்தை ஒதுக்கவேண்டும்.

(1) உடல்நலத்தின்
(2) உடல்நலத்திற்கு
(3) உடல்நலத்தை
(4) உடல்நலத்தோடு

Q2 சிறுவனின் நேர்மையற்ற _______________ அவனுடைய பெற்றோர் மன்னிப்புக் கேட்டனர்.

(1) செயலின்
(2) செயலை
(3) செயலுக்கு
(4) செயலில்

Q3 பலத்த _______________ வேகத்தால் பல கட்டடங்கள் இடிந்து விழுந்தன.

(1) புயலின்
(2) புயலை
(3) புயலுக்கு
(4) புயலில்

Q4 கள்வர்கள் _______________ தங்கச் சங்கிலியைப் பறித்துக்கொண்டு ஓடிவிட்டார்கள்.

(1) சிறுமியோடு
(2) சிறுமியிடமிருந்து
(3) சிறுமியுடன்
(4) சிறுமிக்கு

Q5 "_______________! மழையில் விளையாடாதே!" என்று அம்மா உரைத்தார்.

(1) கண்ணனை
(2) கண்ணா
(3) கண்ணனது
(4) கண்ணனோடு



More papers at www.testpapersfree.com

A2 செய்யுள் / பழமொழி

**Q6 முதல் Q10 வரையுள்ள செய்யுள் / பழமொழியை நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.**

**(10 மதிப்பெண்கள்)**

Q6 ஈவது ________________.

(1) விலக்கேல்
(2) கரவேல்
(3) கைவிடேல்
(4) விளம்பேல்

Q7 ________________ சிறுமையும் தான் தர வருமே.

(1) பெருமையும்
(2) பேராசையும்
(3) பொறுமையும்
(4) பொறாமையும்

Q8 தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்
தன்னையே ________________ சினம்.

(1) வெல்லும்
(2) வீழ்த்தும்
(3) தள்ளும்
(4) கொல்லும்

Q9 நல்லவன் என்று பெயர் எடுக்க நாள் ________________.

(1) போகும்
(2) செல்லும்
(3) வரும்
(4) ஆகும்

Q10 ________________ கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை.

(1) விலக்குவதூஉம்
(2) கொடுப்பதூஉம்
(3) அழிப்பதூஉம்
(4) கெடுப்பதூஉம்



More papers at www.testpapersfree.com

A3 அடைமொழி/எச்சம்

**Q11 முதல் Q15 வரையுள்ள அடைமொழி/எச்சத்தை நிறைவு செய்வதற்கு ஏற்ற மிகப் பொருத்தமான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.**

**(10 மதிப்பெண்கள்)**

Q11 கட்டடங்கள் பல ஆண்டுகள் நிலைத்து நிற்பதற்கு ______________ அடித்தளமே காரணமாகும்.

(1) உறுதியாய்
(2) உறுதி
(3) உறுதியாக
(4) உறுதியான

Q12 மேடையில் பேச்சாளர் ______________ உரை அனைவரையும் கவர்கிறது.

(1) சொல்கின்ற
(2) விளக்குகின்ற
(3) பார்க்கின்ற
(4) ஆற்றுகின்ற

Q13 குறும்புக்காரர்கள் ______________ தீ அறை முழுவதும் பரவியது.

(1) தீட்டிய
(2) போட்ட
(3) மூட்டிய
(4) செய்த

Q14 ஒருவர் வாழ்வில் ______________கல்வி முக்கிய பங்காற்றுகிறது.

(1) உயர
(2) உயரமான
(3) உயரமாய்
(4) உயரமாக

Q15 என் பாட்டி ______________ முறுக்கு சுவையாக இருக்கும்.

(1) அவிக்கும்
(2) கலக்கும்
(3) பிசையும்
(4) சுடும்



More papers at www.testpapersfree.com

A4 முன்னுணர்வுக் கருத்தறிதல்

**Q16 முதல் Q20 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிறைவு செய்வதற்கு ஏற்ற மிகப் பொருத்தமான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.**

**(10 மதிப்பெண்கள்)**

மன்னன் ஒருவன் தன் நாட்டிலுள்ள ஆசிரியர்களை அழைத்தான். "நான் உலக வரலாற்றை அறிய Q16__________. எளிதில் புரிந்துகொள்ளும்படி நீங்கள் உலக வரலாற்றைத் தயார் செய்யவேண்டும்," என்று மகிழ்ச்சியாகக் கூறினான். Q17__________ ஆசிரியர்கள் ஆயிரம் பக்கங்கள் கொண்ட வரலாற்றுப் புத்தகம் தயாரித்துக் கொடுத்தனர். அரசர், "இதை Q18__________ படித்து முடிப்பது?" என்று கூறி அதைச் சுருக்கமாக எழுதித் தரும்படி சொன்னான். பிறகு, ஆசிரியர்கள் ஆயிரம் பக்கங்களிலிருந்து பத்துப் பக்கங்களாகச் சுருக்கித் தந்தனர். மன்னன் அதையும் நிராகரித்துவிட்டான்.

ஆசிரியர்களுக்கு என்ன செய்வது என்று தெரியாமல் Q19__________ இருந்தனர். நடந்ததை அறிந்த தலைமை ஆசிரியர், "இந்த வரலாற்றை நான் Q20__________ எழுதி முடிக்கிறேன்," என்றார். அவர், "மனிதன் பிறக்கிறான்; வாழ்கிறான்; மறைகிறான்! இதுதான் உலக வரலாறு," என்ற வாசகத்தை ஒரு துண்டுக் காகிதத்தில் எழுதி மன்னனிடம் தந்தார். அதைப் படித்து மகிழ்ச்சியுற்ற மன்னன், ஆசிரியர் குழுவைப் பாராட்டிப் பரிசளித்தான்.

*நூல்: அன்பே வெல்லும்*

Q16
(1) போகிறேன்
(2) வேண்டுகிறேன்
(3) நினைக்கிறேன்
(4) விரும்புகிறேன்

Q17
(1) ஆனால்
(2) அதன்படி
(3) இருப்பினும்
(4) ஆயினும்

Q18
(1) எங்கே
(2) எதை
(3) எப்படி
(4) எதனால்

Q19
(1) குழப்பத்துடன்
(2) கவலையுடன்
(3) வேதனையுடன்
(4) வெறுப்புடன்

Q20
(1) மும்முரமாக
(2) வெற்றிகரமாக
(3) அழகாக
(4) நன்றாக



More papers at www.testpapersfree.com

## B5 தெரிவுவிடைக் கருத்தறிதல்

**பின்வரும் கதையைக் கருத்தூன்றிப் படி.**

குமரனும் வேலனும் சகோதரர்கள். அண்ணன் குமரன் பெரிய பணக்காரன். ஆனால், யாருக்கும் உதவி புரிய மாட்டான். தம்பி வேலன் இதற்கு நேர் எதிர், பரம ஏழை. விறகு வெட்டிதான் பிழைத்தான். ஆனால், அவன் தன்னலம் அற்றவன். தன்னால் முடிந்த உதவிகளைப் பிறருக்குச் செய்து வந்தான்.

மழைக் காலம் நெருங்கிக்கொண்டு இருந்தது. அதற்கு முன் நிறைய மரங்களை வெட்டி வைத்துக்கொள்ள வேலன் எண்ணினான். அதனால், வெட்டிய மரங்களைத் தூக்கிவர, அண்ணன் குமரனிடம் போய் அவனுடைய குதிரையை இரவல் கேட்டான். குமரன் வேண்டா வெறுப்பாகத் தன் குதிரையைத் தந்தான். ஆனால், குதிரையைக் கொடுப்பதற்கு முன் "குதிரை பத்திரம். அதற்கு ஏதாவது ஆயிற்று என்றால் உன்னைச் சும்மா விடமாட்டேன்!" என்று எச்சரித்தான் குமரன்.

வேலன் காட்டிற்குச் சென்றான். மரங்களை வெட்டிக்கொண்டு திரும்பும் வழியில் அவன் ஒரு சிறுத்தையிடம் சிக்கிக்கொண்டான். சிறுத்தையைக் கண்டு **பீதியடைந்த** குதிரை, வேகமாக ஓடியது. சிறுத்தை அதன் மேல் பாய்ந்தது. ஆனால் குதிரையின் வால்தான் அதன் வாய்க்குக் கிடைத்தது. குதிரை அறுந்த வாலுடன் தப்பித்துக்கொண்டது. வேலன் வால் அறுந்த குதிரையுடன் தன் அண்ணனிடம் சென்றான்.

வால் அறுந்த குதிரையைக் கண்ட குமரன், மிகுந்த கோபங்கொண்டான். உடனே குமரன், வேலனை நீதிமன்றத்திற்கு இழுத்துச் சென்றான். தன் தம்பியின் மேல் குற்றம் சாட்டினான். நீதிபதி வழக்கை அமைதியாகக் கேட்டார். குமரன் தொடுத்த குற்றங்களை வேலன் மறுக்கவில்லை. வேலன் நீதிபதியிடம், "நான் இதை வேண்டுமென்றே செய்யவில்லை; இது எதிர்பாராமல் நடந்தது," என்று சொல்லி அழுதான். "இப்படி நடக்கும் என்று தெரிந்திருந்தால் நான் அண்ணனிடம் குதிரையை இரவல் வாங்கியிருக்க மாட்டேன். எப்படியாவது அண்ணனிடம் வேலை செய்து இக்குதிரைக்கான பணத்தைக் கட்டிவிடுகிறேன்," —என்று வேலன் நீதிபதியிடம் சொன்னான். அதற்குக் குமரன், "முடியாது! எனக்கு என் குதிரை வாலோடு வேண்டும்," என்று பிடிவாதம் பிடித்தான். இதையெல்லாம் கேட்ட நீதிபதி குமரனிடம், "உனக்கு வால் அறுந்து போகாத குதிரைதானே வேண்டும். அப்படியென்றால் அதற்கு வால் வளரும்வரை அது வேலனிடமே இருக்கட்டும்," என்று கூறித் தீர்ப்பளித்தார்.



More papers at www.testpapersfree.com

**Q21 முதல் Q24 வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (8 மதிப்பெண்கள்)**

Q21 வேலன் நிறைய மரங்களை வெட்ட நினைத்த காரணம் என்ன?

(1) அவன் பரம ஏழை என்பதால்

(2) நிறைய மரங்களை வெட்டி விற்க விரும்பியதால்

(3) பணக்காரன் ஆக விரும்பியதால்

(4) மழைக் காலத்தில் மரம் வெட்ட சிரமம் என்பதால்

Q22 வேலன் வீட்டுக்குத் திரும்பும் வழியில் என்ன நடந்தது?

(1) வீரச்செயல் ஒன்று நடந்தது

(2) வேடிக்கை ஒன்று நடந்தது

(3) விபரீதம் ஒன்று நடந்தது

(4) தீரச்செயல் ஒன்று நடந்தது

Q23 வேலன் தன் தவறுக்காக என்ன செய்ய முன்வந்தான்?

(1) அண்ணனிடம் பணி புரிந்து நட்டத்தை ஈடுகட்ட

(2) விறகு விற்றுப் பணத்தைக் கட்ட

(3) புதிய குதிரை வாங்கித் தர

(4) அண்ணனுக்கு அடிமையாக இருக்க

Q24 இறுதியில் குமரன் ஏன் தன் குதிரையை இழந்தான்?

(1) தனது கோபத்தால்

(2) தனது பிடிவாதத்தால்

(3) தனது கர்வத்தால்

(4) தனது முட்டாள் குணத்தால்



More papers at www.testpapersfree.com

<u>சொற்பொருள்</u>

**வினா Q25-இல் இடம்பெற்றுள்ள சொல்லின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.**

**(2 மதிப்பெண்கள்)**

Q25 பீதியடைந்த

(1) அச்சமடைந்த

(2) கோபமடைந்த

(3) பதற்றமடைந்த

(4) துன்பமடைந்த



More papers at www.testpapersfree.com

## ஆ' பிரிவு

### C6 ஒலி வேறுபாட்டுச் சொற்கள்

பின்வரும் பகுதியில் Q26 முதல் Q29 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான ஒலி வேறுபாட்டுச் சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது.

(8 மதிப்பெண்கள்)

| | | |
|---|---|---|
| Q26 | மோகன் வாழைத்தண்டுகளை வெட்டிக்கொண்டு இருந்தான். அப்போது அவனுடைய சட்டையில் வாழை __________ பட்டது. | Q26(    ) |
| Q27 | அருண் பூங்காவில் மெதுவோட்டம் ஓடினான். அதே __________ அவன் தம்பியும் அங்கே பூப்பந்து விளையாடினான். | Q27(    ) |
| Q28 | கலையரசி தன் மோதிரத்தை வீடு முழுவதும் தேடினாள். இறுதியில் அதைச் சமையலறையின் ஒரு __________ கண்டுபிடித்தாள். | Q28(    ) |
| Q29 | என் பிறந்தநாள் அன்று அம்மா பிரியாணி சமைத்தார். அந்த உணவின் __________ அனைவருக்கும் பசியைத் தூண்டியது. | Q29(    ) |

| | |
|---|---|
| (1) மூலையில் | (2) மனம் |
| (3) மணம் | (4) வேளையில் |
| (5) வேலையில் | (6) கறை |
| (7) கரை | (8) மூளையில் |



More papers at www.testpapersfree.com

D7 கருத்துவிளக்கப்படக் கருத்தறிதல்

பின்வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி:

# செந்தோசாவில் குடும்ப தினம்



24 ஆகஸ்டு 2016

- பலவான் கடற்கரை
- காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை

இந்தக் குடும்ப தினத்தைக் கடந்த பத்து ஆண்டுகளாக நடத்தி வரும் செந்தோசா நிறுவனம், நூற்றுக்கணக்கான குடும்பங்களை ஒன்று திரட்டிய பெருமையையும் பெறுகின்றது.

குடும்ப பிணைப்பை வலுப்படுத்த ஒரு நல்ல வாய்ப்பு!
இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு:

- குடும்ப உறுப்பினர்களுடன் பொன்னான நேரத்தைச் செலவிடுங்கள்!
- மற்ற புதிய நண்பர்களைச் சந்திக்கும் வாய்ப்பை நழுவ விடாதீர்கள்!

**போட்டிகள்**

- தாயாருடன் கயிறு இழுக்கும் போட்டி
- சிறுவர்களுக்கான மாறுவேடப்போட்டி
- தந்தையுடன் பட்டம் பறக்கவிடும் போட்டி

**பரிசுகள்**

முதல் பரிசு : $500
இரண்டாம் பரிசு : $300
மூன்றாம் பரிசு : $200



**உணவு விழாவிலும் கலந்துகொள்ளுங்கள்:**

சீன, மலாய், இந்திய உணவுகளோடு பலவகை பலகாரங்களையும் சுவைக்க ஓர் அரிய வாய்ப்பு!





நிகழ்ச்சிக்கு ஆதரவு : சாரா கடைத்தொகுதி
திலோக் பளாங்கா சமூக மன்றம்
மேல் விவரங்களுக்கு : ஜேம்ஸ் மணி சகோதரர்கள்
(தொ.எண் : 70001324)

பதிவு செய்ய :
www. sentosa.com.sg

More papers at www.testpapersfree.com

**Q30 முதல் Q33 வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் முன்பக்கத்தில் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அடைப்புக்குறிக்குள் எழுது.** (10 மதிப்பெண்கள்)

Q30. இந்தக் குடும்ப தினத்தின் ஏற்பாட்டாளர் யார்?

(1) சாரா கடைத்தொகுதி உரிமையாளர்கள்
(2) திலோக் பளாங்கா மன்ற உறுப்பினர்கள்
(3) செந்தோசா நிறுவனத்தார்
(4) ஜேம்ஸ் மணி சகோதரர்கள் ( )

Q31. செந்தோசா நிறுவனம் என்ன சாதனை புரிந்துள்ளது?

(1) நூற்றுக்கணக்கான குடும்பங்களைக் குடும்ப தினத்துக்கு ஒன்று திரட்டியுள்ளது
(2) பல ஆண்டுகளாக குடும்பதினத்தை ஏற்பாடு செய்துள்ளது
(3) புதிய நண்பர்களைச் சந்திக்கும் வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது
(4) குடும்ப ஒற்றுமையை வளர்க்க போட்டிகளை நடத்தியுள்ளது ( )

Q32. இந்தக் குடும்பதினத்தை நடத்துவதன் முக்கிய நோக்கம் என்ன?

(1) பல போட்டிகளில் கலந்துகொண்டு பரிசு பெறுவது
(2) பல இன மக்களின் உணவைச் சுவைத்து மகிழ்வது
(3) நேரத்தை நல்ல முறையில் செலவிடுவது
(4) குடும்பங்கள் தங்களின் பிணைப்பை மேம்படுத்துவது ( )

Q33. சிறுவர்கள் தங்கள் பெற்றோருடன் எந்தெந்தப் போட்டிகளில் கலந்துகொள்ளலாம்? (4 மதிப்பெண்கள்)

________________________________________

________________________________________

________________________________________



More papers at www.testpapersfree.com

**D8 சுயவிடைக் கருத்தறிதல்**

பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படி.

தேன்மொழி ஓர் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவள். அவள் சிறு வயதாக இருக்கும்போதே அவள் தந்தை ஒரு வாகன விபத்தில் இறந்துவிட்டார். தேன்மொழியின் தாயாருக்கு நிரந்தர வேலை கிடைக்காததால் சில வேளைகளில் அக்குடும்பம் உணவில்லாமல் பட்டினியாகக் கூட போனதுண்டு. அவளையும் அவளின் இரு சகோதரர்களையும் வளர்க்க தாயார் மிகவும் சிரமப்பட்டார்.

தேன்மொழிக்கு ஒரு மாமா இருந்தார். அவர் மாதந்தோறும் தேன்மொழியின் பள்ளிச் செலவுக்குச் சிறிதளவு பணம் கொடுத்து வந்தார். இந்த உதவியைத் தேன்மொழி என்றுமே மறக்காமல் மாமாவிடம் நன்றியுடன் இருந்தாள். அதோடு தேன்மொழி மிகவும் பொறுப்பானவள். தன் தாயார் படும் சிரமங்களை அறிந்து மாமா கொடுக்கும் பணத்தைச் சிறிதளவே தனக்காகப் பயன்படுத்தினாள். மீதத்தைச் சிறிது சிறிதாகச் சேமித்து மறக்காமல் உண்டியலில் போட்டு வந்தாள், தேன்மொழி.

தேன்மொழியின் தாயார் அவளிடம் தன் பிரச்சினைகளை எடுத்துக் கூறியதேயில்லை. இருந்தாலும் அவர் அவளின்மீதும் அவள் சகோதரர்களின்மீதும் அதிக பாசமும் அக்கறையும் காட்டினார். தந்தையை இழந்த தேன்மொழிக்குத் தன் தாயின் அன்பும் மகிழ்ச்சியும் முக்கியமாக இருந்தது. அதனால், அவள் நன்கு படித்து நல்ல வேலைக்குச் செல்லவேண்டும் என்று திண்ணமாக இருந்தாள்.

தீபாவளிப் பண்டிகை நெருங்கியது. அந்த மாதம் தேன்மொழியின் தாயாருக்கு வேலை கிடைக்காததால் தீபாவளிச் செலவுக்கு அவரிடம் கொஞ்சம்கூட பணமில்லை. அதோடு பண்டிகை காலத்தில் தேன்மொழியின் தோழிகளும் உறவினர்களும் புதிய உடைகளை வாங்கினார்கள். இவற்றைக் கண்ட அவளது தாயாருக்கு மிகவும் வருத்தமாக இருந்தது.

தேன்மொழி அம்மாவின் கவலையை உணர்ந்தாள். "என் அம்மாவின் கவலை எனக்குப் புரிகிறது. நான் சேமித்திருக்கும் பணத்தை எடுத்துத் தீபாவளிக்கு வேண்டிய பொருள்களை ஏன் வாங்கக்கூடாது?" என்று தனக்குள் கேட்டுக்கொண்டாள். உடனே அவள் கடைக்குச் சென்று தனக்கும் தம்பிமார்களுக்கும் சட்டைகளோடு, அம்மாவுக்கு ஒரு சேலையும் வாங்கினாள்.

வீட்டை நோக்கி நடந்தபோது அம்மா வெளியே நிற்பதை அவள் உணர்ந்தாள். "தேன்மொழி! தீபாவளிக்குப் புதிய உடை வாங்கித் தர என்னிடம் பணம் இல்லை," என்று கண்களில் நீர் ததும்ப அம்மா கூறினார். தேன்மொழி தான் வாங்கிய பொருள்களைக் காட்டி நடந்ததை விளக்கினாள். "என் அன்பான மகளே! நீ மிகவும் புத்திசாலிப் பெண். உன்னை மகளாகப் பெற்றதை நினைத்து நான் மிகவும் பெருமைப்படுகிறேன்," என்று தேன்மொழியின் அம்மா மகிழ்ச்சியுடன் கூறினார்.



More papers at www.testpapersfree.com

Q34 முதல் Q40 வரையுள்ள வினாக்களுக்கு மேற்கண்ட **பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து** எழுது. (22 மதிப்பெண்கள்)

Q34 தேன்மொழியின் குடும்பம் ஏன் ஏழ்மையில் வாடியது? (3 மதிப்பெண்கள்)

Q35 **'இந்த உதவியை தேன்மொழி என்றுமே மறக்காமல் மாமாவுக்கு நன்றியுடன் இருந்தாள்,'** என்ற வாக்கியத்தில் 'உதவியை' என்னும் சொல் எதைக் குறிக்கிறது? (3 மதிப்பெண்கள்)

36 தேன்மொழி தன் தாய் படும் துன்பத்தைக் கண்டு எப்படி உதவினாள்?
(3 மதிப்பெண்கள்)



More papers at www.testpapersfree.com

Q37 பிற்காலத்தில் சிறந்து விளங்க வேண்டும் என்ற உறுதியான எண்ணம் தேன்மொழிக்கு ஏன் வந்தது? (3 மதிப்பெண்கள்)

Q38 தாயாரின் கவலைக்குக் காரணம் என்ன? (3 மதிப்பெண்கள்)

Q39 தேன்மொழி எவ்வாறு தீபாவளிக்கு வேண்டிய பொருள்களை வாங்கினாள்? (3 மதிப்பெண்கள்)



More papers at www.testpapersfree.com

Q40 தேன்மொழியின் அம்மா அவளை நினைத்துப் பெருமைப்பட்டதற்கான காரணத்தைப்பற்றி உன் நண்பனுக்கு ஒரு குறிப்பு எழுது. (4 மதிப்பெண்கள்)

அன்புள்ள நண்பனுக்கு,

தேன்மொழி

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

இப்படிக்கு,

உன் தோழன்

*** முற்றும் ***



More papers at www.testpapersfree.com

# Answer Key

(நாம் __________ வாழ )

| | | |
|---|---|---|
| 1. 4 | 13. 3 | 26. 6 |
| 2. 3 | 14. 1 | 27. 4 |
| 3. 1 | 15. 4 | 28. 1 |
| 4. 2 | 16. 4 | 29. 3 |
| 5. 2 | 17. 2 | 30. 3 |
| 6. 1 | 18. 4 | 31. 1 |
| 7. 1 | 19. 1 | 32. 4 |
| 8. 4 | 20. 2 | |
| 9. 2 | 21. 4 | |
| 10. 4 | 22. 3 | |
| 11. 4 | 23. 1 | |
| 12. 4 | 24. 2 | |
| | 25. 1 | |

33. சிறுவர்கள் தங்களின் தாயாருடன் கயிறு இழுக்கும் போட்டியிலும், தந்தையுடன் பட்டம் பறக்க விடும் போட்டியிலும் கலந்து கொள்ளலாம்.
34. தேன்மொழியின் தந்தை ஒரு வாகன விபத்தில் இறந்து விட்டதாலும், அவளுடைய தாயாருக்கு நிரந்திர வேலை கிடைக்காததாலும் தேன்மொழியின் குடும்பம் ஏழ்மையில் வாடியது.
35. தேன்மொழியின் மாமா மாதந்தோறும் தேன்மொழியின் பள்ளிச் செலவுக்கு சிறிதளவு பணம் கொடுத்து வந்ததையே மேற்கூறிய வாக்கியத்தில் உதவி என்னும் சொல் குறிக்கிறது.
36. தேன்மொழி, தாய் படும் துயரத்தை கண்டு, அவளுடைய மாமா கொடுக்கும் பணத்தைச் சிறிதளவே அவளுக்காக பயன்படுத்திக் கொண்டு, மீதத்தை சிறிது சிறிதாகச் மறக்காமல் உண்டியலில் போட்டு சேமித்ததன் மூலம் தாய்க்கு உதவினாள்.
37. தேன்மொழியின் தாயார் தன் பிரச்சினைகளை கூறியதே கிடையாது. மேலும், அவர், தேன்மொழியின் மீதும், அவளின் சகோதரர்களின் மீதும் அதிக அக்கறையும் பாசமும் செல்லுத்தினார். தந்தை இல்லாத தேன்மொழிக்கு தாயாரின் அன்பும் மகிழ்ச்சியும் முக்கியமாக இருந்ததால், பிற்காலத்தில் தான் சிறந்து விளங்க வேண்டும் என்ற உறுதியான எண்ணம் தேன்மொழிக்கு வந்தது.

More papers at www.testpapersfree.com

38. தீபாவளி பண்டிகை நெருங்கிக் கொண்டிருந்த வேளையில் தேன்மொழியின் தாயாருக்கு வேலை கிடைக்காததால், அவரிடம் சிறிதளவு கூட பணமில்லை. தேன்மொழியின் தோழிகளும் உறவினர்களும் புதிய உடைகள் வாங்கும்போது, தன்னால் தன் பிள்ளைகளுக்கு புதிய உடைகள் வாங்க முடியாமல் போனதே தாயாரின் கவலைக்குக் காரணம் ஆகும்.

39. தேன்மொழி, அவள் சேமித்து வைத்திருந்த பணத்தை எடுத்துக்கொண்டு கடைக்குச் சென்று தனக்கும் தம்பிகளுக்கும் சட்டைகளோடு, அம்மாவுக்கு ஒரு சேலையும் வாங்கினாள்.

40. தேன்மொழி குடும்பத்தின் நிலை அறிந்து நடந்து கொண்டதால், அவளின் புத்திசாலித்தனத்தையும் அப்படிப்பட்ட பெண்ணை மகளாக பெற்றதை நினைத்தும் அவளின் அம்மா அவளை நினைத்து பெருமைப் பட காரணமாகும்.

More papers at www.testpapersfree.com